**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No. S.T.C.No. 33/2025**

**Deposition of Witness for Complainant DW3**

**திரு. மங்கையர்திலகம் த/பெ. ஜெயராஜ் வயது. 43, ஊர். அரவேனு, கோத்தகிரி**

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**01.07.2026 Witness Signature :**

**DW3 முதல் விசாரணை 11.24 A.M**

1. நான் இவ்வழக்கில் எதிரியாவேன். நீதிமன்ற அனுமதியின்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த வழக்கை என்மீது மனோஜ் என்பவர் காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கு பொய்யான வழக்காகும். புகார்தாரரை யார் என்றே எனக்கு தெரியாது. நான் பார்த்ததே இல்லை. நான் சண்முகம் என்பவர் வைத்திருந்த சன் பைனான்ஸ் என்ற நிறுவனத்தில் சண்முகம் என்பவரிடம் கடன் பெற்றுக்கொண்டு காசோலைக் கொடுத்தேன். அது மட்டுமல்லாமல் எனது கணவரின் ATM கார்டும், காசோலை புத்தகத்தை கொடுத்துள்ளார். சண்முகம் என்பவம் எதுவ்ும் எழுதாத வெற்று பேப்பரில் என்னிடமும் எனது கணவரிடமும் கையெழுத்து வாங்கினார். முதலில் ரூ. 2,00,000/– பணம் 5 ரூபாய் வட்டிக்கு வாங்கினோம். ATM சண்முகம் அவர்களிடம் இருந்ததால், வட்டிபோக மீதி பணத்தை எங்களிடம் கொடுப்பார். வட்டியை எடுத்துக்கொண்டதால், எங்களால் குழந்தைகளின் பள்ளி செலவை பார்ப்பதற்காக மீண்டும் மீண்டும் அவரிடமே வட்டிக்கு பணம் வாங்கினோம். சிறுக சிறுக வாங்கியது மொத்தம் ரூ. 9,00,000/– ஆகிவிட்டது. வட்டியாக ரூ.35,000/–

கொடுத்ததால் எங்களால் சமாளிக்க முடியவில்லை. (சாட்சி மீண்டும் ரூ.45,000/− என்று கூறுகிறார்.) 09.12.2024ம் தேதியன்று தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு புகார் மனு என் கணவர் கொடுத்தார். தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு அளித்த மனுவின்பேரில், என் கணவரை 12.01.2025ம் தேதியன்று கோத்தகிரி காவல் நிலையத்தில், விசாரணை செய்தார்கள்.

2. சண்முகம் என்பவரிடம் வட்டியை குறைத்துக் கொள்ளும்படியும், கொஞ்சம் கொஞ்சமாக அசல் தொகையை கட்டிவிடுவதாக கேட்டுக்கொண்டோம். சண்முகம் மொத்தத் தொகையையும் கட்டிவிடும்படி எங்களை மிரட்டினார். பின்னர் கோத்தகிரி காவல் நிலையத்தில், 5 ரூபாய் வட்டி வாங்கியுள்ளது தவறு என்று கூறியதால், இவர்களிடம் இனிமேல் எந்த பணமும் வாங்கமாட்டோம் என்று சமாதானமாக போவதாக கூறினார். என் கணவரும் நாங்கள் சமாதானமாக போவதாகவும், வழக்கை வாபஸ் வாங்குவதாகவும் காவல் நிலையத்தில் சொன்னார். எங்களிடமிருந்து வாங்கிய கசோலை, ATM card ஐ சண்முகம் தரவில்லை.

## குறுக்கு விசாரணை

1. தற்போது என்னிடம் காட்டப்படும் காசோலை என்னுடையது என்றால் சரிதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். என் வங்கி புத்தகத்தில் போதிய பணம் இல்லை என்று வா.சா.ஆ.2 தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 03.12.2024ல் வா.சா.ஆ.3 அனுப்பப்பட்டது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 நான் அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் என்றால் சரிதான். அறிவிப்பை 04.12.2024ல் பெற்றுக் கொண்டு இன்றுவரை புகார்தாரருக்கு எந்தவித அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரிதான். மனோஜ் மீது எந்தவிதமான காசோலை

வழக்கும் எந்த நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தமிழக முதலமைச்சர் தனிபிரிவிற்கு மனு நான் எதுவும் அனுப்பவில்லை, என் கணவர்தான் அனுப்பியுள்ளர் என்றால் சரிதான். இதுநாள் வரை எனது வங்கிக்கு நான் எந்தவிதமான அறிவிப்பும், ATM card, காசோலை சண்முகத்திடம் உள்ளது குறித்து எதுவும் அனுப்பவில்லை. சண்முகத்தின் மீது தமிழக முதலமைச்சர் தனிபிரிவிற்கு கொடுத்த புகாரை தவிர வேறு எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

2. சண்முகத்தின் மீது எந்தவித நோட்டிசும் நான் அனுப்பவில்லை என்றால் சரிதான். எந்தவித பரிவர்த்தணையும் எங்களிடம் செய்வதில்லை என்றும், எங்களை மிரட்டி எந்த பணமும் வாங்கமாட்டோம் என்று காவல் துறையிடம் எழுதிக் கொடுத்தார். சண்முகம் எப்பொழுதெல்லாம் எங்களை மிரட்டினார் என்று தேதி தெரியாது என்றால் சரிதான். மிரட்டியது சம்பந்தமாக போலிஸில் நாங்கள் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எங்களது புகாரில் உண்மையிருந்தால், போலிசார் சண்முகத்தின் மீது நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றும் பொய் என்பதால் தான் மனுவை தள்ளுபடி செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லைஎன்றாலும் இந்த வழக்கில் தப்பித்துக்கொள்வதற்காக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காசோலை கொடுத்து மோசடி செய்துள்ளதால் தப்பிக்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be cor– rect.**

**Sd/– G. Amirdham, 01.07.2026**
**Judicial Magistrate,**
**Kotagiri**